# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.7/2020

பி.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 22–10–2025.

பெயர் = சண்முகவேல் பி.சா.–1

பி.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் கு.வி.–

(1) எனக்கு வயது 49. நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் வயர்கட்டில் பின்னும் வேலை பார்த்து வருகிறேன். வழக்கு தாக்கல் செய்த நபர்களை எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். 2ம் பிரதிவாதி யார் என்றால் என்னுடைய உறவினர் என் அம்மாவின் அண்ணன் பேரன் ஆவார். எனக்கு மாமா முறை என சாட்சி கூறுகிறார். எனக்கு சொந்த ஊர் செம்பட்டி. எந்த சொத்திற்கு வழக்குதாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் ஆமாம். எத்தனை சொத்துக்களுக்கு வழக்கு போட்டுள்ளார்கள் என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என தெரியுமா என்றால் தெரியாது. 1ம் வாதி செம்பட்டியில் காரை வீடு கட்டியுள்ளாரா என்றால் ஆமாம். 1ம் வாதி அவருடைய வீட்டிற்கு முன்பு உள்ள இடத்திற்குதான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவாச்சொத்தின் தென்வடல் கிழமேல் அடிவிவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் வாதியின் வீட்டிற்கு முன்புறம் உள்ள இடம் பொதுப்பாதை என சொல்கிறேனா என்றால் ஆமாம் என சாட்சி கூறுகிறார்.

(2) வழக்கு தாக்கல் செய்துள்ள இடத்திற்கு அடுத்து வடக்கே உள்ள இடம் என்னுடைய இடமா என்றால் இல்லை. சாட்சி மீண்டும் அது தன்னுடைய இடம்தான் என கூறுகிறார். நான் என்னுடைய இடத்தை யாரிடம் கிரயம் வாங்கினேன் என்றால் சக்திவேல் வகையறாவிடமிருந்து கிரயம் வாங்கினேன். சக்திவேல் வகையறாவிற்கு நான் கிரயம் வாங்கிய சொத்து எவ்வகையில் பாத்தியம் என எனக்குத் தெரியாது. அவர்களுக்கு பூர்வீக பாத்தியம் என எனக்கு கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் கிரயம் வாங்கியுள்ள இடத்திற்கு மேல்புறம் நாராணடி, சிவனாண்டி ஓட்டுவீடு மற்றும் காலியிடம் உள்ளது என்றால் சரிதான். நான் கிரயம் வாங்கிய இடத்திற்கு கிழக்கே உள்ள இடம் வாதிகளுக்கு

பாத்தியமானது என்றால் சரிதான். நான் கிரயம் வாங்கிய இடத்திற்கு வடக்கே கிழமேல் வீதி உள்ளது என்றால் சரிதான். பஞ்சாயத்து ரோடு உள்ளது என சாட்சி கூறுகிறார். தெற்கே வாதிகளுக்கு பாத்தியமான இடம் உள்ளதா என்றால் பொதுவீதி உள்ளது என சாட்சி கூறுகிறார். பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தும்போது நான் சென்றிருந்தேனா என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.1ல் எல்லாப்பக்கத்திலும் சண்முகவேல் என நான் கையெழுத்துச்செய்துள்ளேன் என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.1ன் எல்கைமாலில் தெற்கே சின்னஅழகன் காலியிடம் என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் பொதுவீதியும், அடுத்ததாக வாதிகளின் இடமும் உள்ளது என சாட்சி கூறுகிறார்.

(3) பி.வா.சா.ஆ.1ல் தெற்கே வாதிகளின் இடம் குறிப்பிட்டுள்ளதை தெரிந்துகொண்டுதான் நான் கையெழுத்து செய்தேனா என்றால் அப்போது வாதிகள் வீடுகட்டவில்லை என்பதால் வாதிகளின் இடம் என குறிப்பிட்டுள்ளோம் என சாட்சி கூறுகிறார். சக்திவேல் வகையறாவிடமிருந்து நாங்கள் கிழமேல் 58 அடி தென்வடல் 46.3/4 அளவு இடம் கிரயம் வாங்கியுள்ளோம். பி.வா.சா.ஆ.1ல் கிழமேல் 54 அடி தென்வடல் 36 அடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், வீட்டடி இடத்தை அவர்கள் எழுதிக்கொடுத்தார்கள் அதன்பிறகு அவர்களுடைய பேரன்கள் மீதி இடத்தை எழுதிக்கொடுத்தார்கள் என சாட்சி கூறுகிறார். நான் கிரயம் பெறும்போது காலி இடமாகத்தான் வாங்கினேன் என்றால் சரிதான். நான் கிரயம் வாங்கியதற்கு பிறகு என் பெயருக்கு பட்டா மாற்றியுள்ளேனா என்றால் ஆமாம். செம்பட்டி கிராமத்தில் நத்தம் சர்வே 1991ம் ஆண்டு செய்தார்கள் என்றால் தெரியாது. நான் கிரயம் வாங்குவதற்கு முன்பாக எங்களது இடத்தை சர்வே செய்துவிட்டார்கள் என்றால் எனக்குத் தெரியாது. நான் 2005ம் வருடம் கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். சர்வேப்படி கிழமேல் 58 அடி தென்வடல் 46.3/4 அளவு என்னுடைய இடம் உள்ளது என சாட்சி கூறுகிறார். சர்வேப்படி எனக்கு கிழமேல் 51 அடி தென்வடல் 36 அடி கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

(4) நான் சக்திவேல் வகையறாவிடமிருந்து அடியளவு அதிகம் காண்பித்து சொத்தை எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகளின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்வதற்காக அடியளவை அதிகம் காண்பித்து பத்திரம் எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய இடத்திற்கு தெற்கே பாதை உள்ளது என எதனை வைத்து கூறுகிறேன் என்றால் பத்திரத்தை பார்த்து சொல்லவில்லை. முன்பும் பாதையாக

இருந்தது என சாட்சி கூறுகிறார் எனக்கு கொடுத்துள்ள பட்டாவை வைத்து பாதை என சொல்கிறேனா என்றால் இல்லை. ஆரம்பத்திலிருந்தே தாவாச்சொத்து பாதையாக உள்ளது அதனால்தான் நான் பாதை என சொல்கிறேனா என்றால் ஆமாம். ஆரம்பத்திலிருந்தே தாவாச்சொத்து பாதையாக இருந்திருந்தால் 2005 ல் நான் கிரயம் வாங்கும்போது தெற்கே வாதிகளின் இடம் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் வாதிகள் பாதையை ஆக்கிரமிப்பு செய்துவிட்டதால் வாதிகளின் இடம் என சொல்லியுள்ளேன் என சாட்சி கூறுகிறார். வாதிகள் அவர்களுடைய இடத்தில் கம்பிவேலி போட்டிருந்தார்கள் என்றால் பாதையையும் தாண்டி எங்கள் இடத்தையும் சேர்த்து கம்பி வேலி போட்டிருந்தார்கள் என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்தில் 3 கல்தூண்கள் போட்டுவைத்திருந்தார்களா என்றால் தெரியாது.

(5) தாவாச்சொத்தில் ஓடுகள் அடுக்கிவைத்துள்ளார்கள் என்றால் சரிதான். பழைய ஓடுகள் உள்ளன என சாட்சி கூறுகிறார். கம்பிவேலியை பிய்த்து எடுத்துவிட்டு நான் வேலி போட்டேன் என்றால் சரியல்ல. வாதிகளே பிய்த்து எடுத்துவிட்டார்கள் என சாட்சி கூறுகிறார். நான் வேலியை பிய்த்ததால் தான் வாதிகளுக்கும் எங்களுக்கும் தகராறு ஏற்பட்டது என்றால் சரியல்ல. கமிசனர் தாவாச்சொத்திற்கு வந்து அளந்தபிறகு வாதிகள் வேலியை எடுத்துவிட்டதாக சாட்சி கூறுகிறார். வாதிகள் வீட்டிற்கு கிழக்கே அவர்களது காலியிடம் உள்ளது என்றால் சரிதான். வாதிகள் வீட்டிற்கு கிழக்கே தென்வடல் ரோடு உள்ளது அதுவரை வாதிகளின் காலியிடம் உள்ளது என்றால் அவ்வாறு சொல்கிறார்கள் என சாட்சி கூறுகிறார். அவர்கள் வீட்டிற்கு கிழக்கே உள்ள காலியிடத்தை தான் 2 வது லக்க சொத்தாக காண்பித்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது என சாட்சி கூறுகிறார். வாதிகளின் வீடு தாவா 1,2 லக்கச்சொத்துக்களும் வாதிகளின் புழக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். கமிசனர் தாவாச்சொத்தை அளக்கும்போது நான் இருந்தேன் என்றால் சரிதான். சர்வேயர் வரைபடத்தில் உள்ளபடி பூமியில் இடமில்லை என கமிசனர் சொன்னார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது எங்களது இடம் சரியாக உள்ளதாக சொன்னார் என சாட்சி கூறுகிறார்.

(6) தாவாச்சொத்து அளந்து காண்பிக்க முடியவில்லை என அவருடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் கிரயம் வாங்கியதிலிருந்து இன்றுவரை என்னுடைய இடம் காலியிடமாகத்தான் உள்ளது என்றால் சரிதான். கமிசனர் தாவாச்சொத்தை

பார்வையிட்டு ஆட்கள் சென்றுவரக்கூடிய பாதையாக இல்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் அடைத்துப்போட்டுள்ளதால் அவ்வாறு உள்ளது ஆனால் வீதியாக உள்ளது என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்திற்கு கிழக்கேயும், மேற்கேயும் ஆட்கள் குடியிருக்கிறார்களா என்றால் மேற்கே ஒரு வீடு இருந்தது அந்த வீட்டில் இருந்த பாட்டி இறந்துவிட்டார் கிழக்கே யாருமில்லை என சாட்சி கூறுகிறார். கிழக்கே உள்ள இடத்தை தாண்டி வீடுகள் இருப்பதாக சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்திற்கு மேற்கேயும், கிழக்கேயும் உள்ள இடத்தை பொதுப்பாதையாக ஜனங்கள் புழங்கவில்லை என்றால் அடைத்துவைத்துள்ளதால் ஜனங்கள் புழங்கவில்லை என சாட்சி கூறுகிறார். எத்தனை வருடங்களாக புழங்காமல் உள்ளது என்றால் 20 வருடத்திற்குள் இருக்கும் என சாட்சி கூறுகிறார்.

(7) தாவாச்சொத்திற்கு கிழக்கேயும், மேற்கேயும் உள்ள இடத்தை எப்போதும் ஜனங்கள் புழங்கவில்லை என்றால் சரியல்ல. வாதிகளுக்கு அவர்கள் கிரயம் வாங்கிய சொத்து எவ்வகையில் பாத்தியம் என தெரியுமா என்றால் தெரியாது. அவர்கள் யாரிடம் இருந்து கிரயம் வாங்கினாரகள் என்பது எனக்குத் தெரியாது என்றால் சரிதான். கிழமேல் தென்வடல் எத்தனை அடி வாங்கினார்கள் என எனக்குத் தெரியாது என்றால் சரிதான். நான் 2005 ல் கிரயம் வாங்கியபோது வாதிகள் அந்த இடத்தில் காரை வீடு கட்டியிருந்தார்கள் என்றால் சரிதான். வீதிக்கும் வடக்கே வீடு கட்டியிருந்தார்கள் என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்தை வாதிகள் சென்றுவர பாதையாக புழங்கிவந்தார்கள் என்றால் சரியல்ல. தாவாச்சொத்து எப்போதுமே பாதையாக இல்லை வருவாய் ஆவணங்களில் பாதையாக வகைப்பாடு செய்யப்பட்டதை வைத்துக்கொண்டு நான் பாதை என சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் அடியளவு கூடுதலாக காண்பித்து கிரயம் வாங்கிவிட்டு தாவாச்சொத்தை பாதையாக சொல்லிவருகிறேன் என்றால் சரியல்ல. 2 வது லக்கச்சொத்தில் வேப்பமரம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தபிறகு அந்த வேப்பமரத்தை வெட்டி அவர்களிடம் பிரச்னை செய்தேன் என்றால் சரியல்ல. தாவாச்சொத்து வாதிகளுக்கு கிரயப்பாத்தியப்பட்ட சொத்து நான் அவர்களிடம் வீண்விவாதம் செய்துவருகிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S
Date: 2025.10.22 17:00:59 +0530